# டொக்டரானார் மம்முட்டி!



அப்பாவின் ஆசை நிறைவேறியது கேரள பல்கலைக்கழகம் டொக்டர் பட்டம் (முனைவர்) வழங்கி நடிகர் மம்முட்டியைக் கௌரவித்துள்ளது. இந்தப் பட்டம் கிடைத்தது பற்றி டொக்டர் மம்முட்டி என்ன சொல்கிறார்?

“என்னை டொக்டராக்கிப் பார்க்க வேண்டும் என்பது தான் அப்பாவின் ஆசை. அதற்காகவே பிளஸ்–2வில் என்னை பயோலஜி எடுக்கச் சொன்னார். ஆனால் எனக்கும் பயோலஜிக்கும் ஏகப்பட்ட தூரம். எப்படி முயன்றும் பயோலஜி பாடம் என்னை ஓரங்கட்டிக் கொண்டே போய்விட, அப்போது முடிந்தது டொக்டர் கனவு. ஆனால் நடிக்க வந்தபிறகு படங்களில் எப்போதாவது கிடைக்கும் டொக்டர் வேடத்தில் என்னை நானே சமாதானம் செய்து கொள்வேன். இப்போது உண்மையிலேயே பல்கலைக்கழகம் எனது கலைப்பணிக்காக டொக்டர் பட்டம் வழங்கியிருப்பதில் நெகிழ்ந்து விட்டேன். இந்தப் பட்டத்தை என்னை டொக்டர் ஆக்கிப்பார்க்க ஆசைப்பட்ட என் அப்பாவுக்கே சமர்ப்பிக்கிறேன்.” என்றார்.

# சுவிஸ் திரையரங்குகளில் தமிழர்களின் கலாச்சாரம் – காதல்





Topic film AG இன் தயாரிப்பில் சுவிஸ்சர்லாந்தின் இயக்குநரான Anna Luif இன் இயக்கத்தில் வரும் மார்ச் 11 திகதி சுவிஸ் திரைகளில் Madly in Love திரைப்படம் வெளியாக இருக்கின்றது. கடுமையான கலாசாரக் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட இலங்கைத் தமிழரான நாயகன், சுவிஸ் பெண் ஒருத்தியுடன் காதல் வயப்படுவதும், நாயகனுக்கு இலங்கையில் பெண் நிச்சயிக்கப்படுவதுமாக கலாசாரம் – காதல் என்பவற்றிற்கிடையிலான ஊடாட்டமாக படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுவிஸ் வாழ் தமிழர்களின் பண்பாடு குறித்த ஒரு பார்வையை பார்வையாளர்களுக்கு இப்படம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. Anna Luif இற்கு இது இரண்டாவது படமாகும். சூரிச் நகரில் பிறந்து இந்தியாவில் பணியாற்றி, திரைப்படத்துறையைக் கற்றுக்கொண்ட இவர், ஏற்கனவே Little Girl Bleu என்ற படத்தினை இயக்கியிருந்தார்.



# ஈழத்தமிழரின் திரைப்படத்துக்கு நோர்வேயில் விருது!

ஈழத்தமிழரான லெனின் எம். சிவம் இயக்கிய ‘1999’ என்னும் திரைப்படத்துக்கு நோர்வேயில் நடந்த தமிழ்த் திரைப்பட விழா– 2010 இல் விருது கிடைத்துள்ளது. இத்திரைப்படமானது கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் வன்கூவர் சர்வதேச திரைப்பட விழாவில் முதன்முதலில் திரையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதை இயக்கிய லெனின் எம். சிவம் என்பவர் கனடாவில் வசிக்கும் ஒரு ஈழத்தமிழராவார். கடந்த புதன்கிழமை நோர்வே ஒஸ்லோ நகரில் தமிழ்த் திரைப்படங்கள் மாத்திரம் திரையிடப்படுவதற்கான விழா ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நிகழ்விலேயே ‘1999’ க்கு ‘மிட்நைட் சன்’ (நள்ளிரவுச் சூரியன்) என்னும் விருது கிடைத்துள்ளது. இந்த விழாவில், ஈழத்தமிழர்கள் தயாரித்த




இன்னும் சில குறும்படங்களும் திரையிடப்பட்டன. இதில் நோர்வேயைச் சேர்ந்த தமிழியம் சுபாஸ் இயக்கிய ‘வன்னி எலி’ என்ற குறும்படத்துக்கு மிகச் சிறந்த குறும்படத்துக்கான விருது கிடைத்துள்ளது. இப்படம் எதிர்வரும் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரான்சிலும் திரையிடப்படுகின்றது.

1999 திரைப்படமானது ஈழத்தமிழர்கள் எதிர்நோக்கும் வன்முறைகள் காரணமாக கனடாவுக்கு குடிபெயர்ந்து அங்கு அவர்கள் வாழ்க்கையைக் கொண்டுசெல்வதற்காக படும்பாட்டை எடுத்துரைக்கின்றது. மேற்படி திரைப்பட விழாவில் அண்மையில் வெளியான இந்திய திரைப்படங்களான சமுத்திரக்கனியின் ‘நாடோடிகள்’, மிஸ்கினின் ‘நந்தலாலா’, மற்றும் சசிகுமாரின் ‘சுப்ர மணியபுரம்’ ஆகியனவும் திரையிடப்பட்டன. எனவே மேற்படி இயக்குனர்களும் கூட விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

# தன்னை மணப்பவர் விடுதலைப் புலி ஆதரவாளரில்லை என ரம்பா அறிவிப்பு



நடிகை ரம்பாவை மணக்கும் கனடா வாழ் இலங்கைத் தமிழர் இந்திரன் விடுதலைப் புலி ஆதரவாளர் என்று வெளியான செய்திகளை ரம்பாவும் அவரது அண்ணன் வாசுவும். இந்தத் திருமணத்தை விரும்பாத சிலர் செய்யும் சதி இது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். தமிழ் திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருந்தவர் ரம்பா. ரம்பாவுக்கும் கனடா வர்த்தகரான இந்திரனுக்கும் சமீபத்தில் திருமணம் நிச்சயமானது.

இவரது நிறுவனம் ரம்பாவை சில மாதங்களுக்கு முன் விளம்பர தூதுவராக நியமித்தது. அப்போது இந்திரனுக்கும் ரம்பாவுக்கும் காதல் மலர்ந்தது. சமீபத்தில் இருவருக்கும் சென்னை அடையாறு பார்க் விடுதியில் நிச்சயதார்த்தம் நடந்தது. ஏப்ரல் 8ம் திகதி திருப்பதியில் திருமணத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர். இந் நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இந்திரனை தொடர்புபடுத்தி செய்திகள் வெளிவந்தன. இந்திரன் விடுதலைப் புலிகள் ஆதரவாளர் இல்லை என்றும் அமெரிக்கா, கனடாவில் உள்ள இந்திய தூதரகங்கள் அவர் இந்தியா வருவதற்கு விசா அளிப்பதன் மூலம் இதை அறிய முடியும் என்றும் கூறியுள்ளனர். இதுபற்றி ரம்பாவின் அண்ணன் வாசு கூறுகையில், இந்திரன் பற்றி நல்லா விசாரிச்சுதான் இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சோம். நாங்கள் இந்த திருமணத்தில் திருப்தியாக இருக்கிறோம். எந்த குழப்பமும் இல்லை. இந்திரனின் தந்தை பெயர் பத்மநாபன். இவரை விடுதலைப் புலிகளின் குமரன் பத்மநாபன் என்று தவறாக புரிந்து இப்படி பேசுகிறார்கள் போலிருக்கிறது என்றார். இதுபற்றி ரம்பா கூறுகையில், என் மீது பொறாமை கொண்ட சிலர்தான் இப்படியெல்லாம் வதந்தி பரப்புகிறார்கள். எங்கள் காதல் உண்மையானது. அதைவிட உண்மையானவர் எனக்கு கணவராக வரப்போகும் இந்திரன்? என்றார்.

# சினேகனின் இன்னொரு பாடல் கொலை



தரமான பாடல்களை மட்டுமல்ல சமூகச் சீர்கேடான பாடல்களை வடிப்பதிலும் பாடலாசிரியர் சினேகன் முன்னணிதான். ஏற்கனவே சாமி படத்தில் ‘கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப்போலாமா?’ என்ற பாடலை எழுதி வாங்கிக்கட்டியவர், இப்போது ‘கந்தா’ படத்துக்கு சிநேகன் எழுதிய பாடல் அடுத்தகட்ட சர்ச்சையின் ஆரம்பம் என்கிறது, திரையுலக வட்டாரம். பாடல் இப்படி ஆரம்பிக்கிறது. ‘பத்துலாரி கட்டில் வேணுமா? நான் தரேண்டி’ என்று நாயகன் ஆரம்பிக்க, நாயகியோ பதிலுக்கு ‘8 லாரி தொட்டில் வேணுமா நான் தரேண்டா’ என்று அதிரடி பதில் தருவதாக பாடல் போகிறது. இசையமைப்பாளர் சக்தி ஆர்.செல்வா இசையில் வெளிவரும் இப்பாடல் இவர் மீது இன்னொரு சர்ச்சையை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சமூகம் எப்படிப் போனால் என்ன, பேசப்பட்டால் சரி.